நான்காவது தேர்ச்சி : பல்வேறு பக்தி முயற்சிகளின் வழியாக செபவாழ்வை மென்மேலும் வளர்த்துக் கொள்வர்

23

## 4.6. திருவழிபாட்டில் இறை ஆராதனை

இறைவன் வாழும் இல்லம் என்பது
ஆலயமாம் - இங்கு
இறைமக்கள் யாவரும் இணைந்து வருவது
ஆனந்தமாம் - நாம்
இறைவன் தெரிந்த புது இனம்
இறை அரச குருத்துவத் திருக்குலம் - இந்த
உண்மை நானிலம் முழுவதும் பரவணும்
அன்பு மலரணும் - 2

மனம் தேடும் இறைவனை தினம்தோறும் காண
மாண்புறு ஆலயம் இருக்கின்றது - இறை
மலர்ப்பாதம் தொழுது பணிகின்ற போது
நம் உள்ளம் ஆலயம் ஆகின்றது
இறை ஆவி குடிகொள்ளும் உயிருள்ள ஆலயம்
என்றைக்கும் நாம் தானே - 2
இந்த சிந்தனை தேன்தானே

கரம் கூப்பி இறைவனைப் பணிகின்றபோது
பாரங்கள் நம் நெஞ்சில் குறைகின்றது
அவர் வரம் வேண்டி
எல்லோரும் மன்றாடும் போது
நம் வாழ்வு அருளாலே நிறைகின்றது
இறை ஆவி குடிகொள்ளும் உயிருள்ள ஆலயம்
என்றைக்கும் நாம் தானே - 2
இந்த சிந்தனை தேன்தானே

**பதிலளியுங்கள்**

1. இறைவன் வாழும் இல்லம் எது?
2. திருப்பலியில் ஏன் பங்குபற்றுகிறீர்?
3. நீர் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் பங்குபற்றினீரா?
4. திருப்பலிவேளையில் குரு அணிந்திருந்த பூசை உடுப்பின் நிறம் என்ன?
5. வெவ்வேறு நிற பூசை உடுப்புக்களை வெவ்வேறு தருணத்தில் குரு அணிவதற்கான காரணம் என்ன?

இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருவழிபாடு பற்றி பின்வருமாறு கூறுகிறது:

- திருவழிபாடு என்பது இறைமக்கள் இறைமகன் இயேசுவோடு சேர்ந்து தந்தையாகிய இறைவனுக்குத் தங்கள் சொல்லாலும் செயலாலும் செய்யும் வழிபாடாகும். திருவழிபாடு என்பது ஒரு கோணத்தில் பார்த்தால் ‘‘கிறிஸ்துவின் பணி’’யாகவும் மறுகோணத்தில் பார்த்தால் திருச்சபையென்னும் அவரது ‘‘மறையுடலின் பணி’’யாகவும் உள்ளது.

திருவழிபாடு என்பது மறையுடலின் தலையாகிய கிறிஸ்துவாலும் உடலாகிய திருச்சபையாலும் இணைந்து ஆற்றப்படும் ஒரு கூட்டு வழிபாட்டுச் செயலாகும்.

திருவழிபாடு என்பது எந்த ஒரு தனிப்பட்ட திருவழிபாட்டு நிகழ்ச்சியையும் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுவதில்லை. மாறாக, எல்லா திருவழிபாட்டு நிகழ்ச்சிகளின் (கொண்டாட்டங்களின்) தொகுப்பையே நாம் திருவழிபாடு என்கிறோம், இவ்வாறு திருவழிபாட்டை உருவாக்கும் திருவழிபாட்டின் உட்கூறுகள் முக்கியமாக மூன்று வகைப்படும். அவையாவன :-

1. திருப்பலி
2. அருளடையாளங்கள்
3. இறைபுகழ்மாலை

### செயற்பாடு

1. திருவழிபாடு என்றால் என்ன?
2. திருவழிபாட்டின் உட்கூறுகளைப் பெயரிடுக.
3. ‘‘ஞாயிறு திருவழிபாடுதான் திருவழிபாடுகளின் இதயம் எனும் தலைப்பில் சுவரொட்டி தயாரிக்கவும்
4. திருவழிபாட்டில் அர்த்தமுள்ள முறையில் எவ்வாறு பங்கு பெறுவீர் என எழுதவும்.

## திருவழிபாட்டின் நோக்கம்

**மூன்று நோக்கங்கள்**

இறைவனுக்கு ஆராதனை செலுத்துதல்

மனிதனைப் புனிதப்படுத்தல்

கிறிஸ்தவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்

## திருவழிபாட்டு ஆண்டு

சாதாரண ஓர் ஆண்டைப்போலவே, திருவழிபாட்டு ஆண்டும் 52 வாரங்களைக் கொண்டது. இது திருவருகைக் காலம், கிறிஸ்து பிறப்புக்காலம், ஆண்டின் பொதுக்காலம் (முதற்பகுதி) தபக்காலம், பாஸ்காக் காலம், ஆண்டின்


பொதுக்காலம் (இரண்டாம் பகுதி) என்ற காலக் கட்டங்களைக் கடந்து நவம்பர் மாத இறுதி வாரத்தில், அதாவது அனைத்திற்கும் ஆண்டவராம் கிறிஸ்து அரசரின் விழாவிற்குப் பின்வரும் சனிக்கிழமையுடன் முடிவடைகின்றது. இந்த ஓராண்டு கால வட்டத்தில் கிறிஸ்துவின் ''பாடுகள், மரணம், உயிர்ப்பு'' ஆகியவை நினைவுகூரப்படுகின்றன; மீண்டும் கொண்டாடப்படுகின்றன; மீண்டும் பிரசன்னப்படுத்தப்படுகின்றன. அதாவது கிறிஸ்துவின் ''முதல் வருகைக்காக'' ஆயத்தம் செய்யும் பணியோடு ஆரம்பமாகும் இத்திருவழிபாட்டு ஆண்டு, அவருடைய ''இரண்டாம் வருகைக்காக'' நம்மை ஆயத்தம் செய்யும் பணியோடு முடிவடைகின்றது.

கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறைபொருளையே நாம் ''ஓர் ஆண்டு கால'' வட்டத்தில்

1. நினைவு கூரவும்
2. மீண்டும் பிரசன்னப்படுத்தவும்

அதன் வழியாக இறைவனின் கொடைகளைப் பெற்று மீட்படையவும் திருச்சபை நமக்கு ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது.

அதாவது நமது மீட்பின் மறை நிகழ்ச்சிகளை ஓராண்டு கால வட்டத்தில் கொண்டாட திருச்சபை நமக்குச் செய்து கொடுத்துள்ள ஏற்பாட்டையே நாம் ''திருவழிபாட்டு ஆண்டு'' என அழைக்கிறோம்.



பாஸ்கா மறைநிகழ்ச்சியை திருழிபாட்டில் நினைவு கூருவதற்காக உன்னத குருவாகிய கிறிஸ்து தமது பாஸ்கா மறைநிகழ்ச்சியுடன் திருச்சபையை முழுமையாக இணைத்தார்.ற

இரண்டாம் வத்திக்கான் சங்கஏடு

“திருவழிபாடு” எண்.07

திருவழிபாட்டில் பாஸ்கா மறைநிகழ்ச்சியை நினைவுகூருவதற்காக தம் அன்புமிக்க மணமகளாம் திருச்சபையைக் கிறிஸ்து என்றுமே தம்முடன் இணைத்துக் கொள்ளுகின்றார்.

## I. திருவருகைக் காலம் :

கிறிஸ்து பிறப்புக்கு முன்னுள்ள நான்கு வாரங்களை நாம் திருவருகைக்காலம் என்கிறோம். கிறிஸ்து அரசர் பெருவிழாவைத் தொடர்ந்து வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கும் இத்திருவருகைக்காலம் டிசம்பர் 24ம் திகதி வரை நீடிக்கிறது.

ஆண்டவரின் முதல் வருகைக்காக இஸ்ரயேல் மக்கள் தங்களை தயார் செய்ததைப் போல நாமும் இன்று இயேசுவின் பிறப்பைப்பற்றி தியானிக்கவும், அவருடைய இரண்டாம் வருகைக்காக நம்மை ஆயத்தம் செய்யவும் இக்காலம் வழங்கப்பட்டுள்ளது.

## II. கிறிஸ்து பிறப்புக் காலம் :

டிசம்பர் 25தொடக்கம் ஆண்டவர் இயேசுவின் திருமுழுக்கு வரையிலான காலப்பகுதியை கிறிஸ்து பிறப்புக் காலம் எனக்குறிக்கிறோம். பாவ இருளிலிருந்து மனிதன் கிறிஸ்து பிறப்பு வழியாக வரும் மீட்பின் மகிழ்ச்சியில் பங்கு கொள்கிறான். எல்லோரிடமும் பகிர்ந்து வாழ்ந்து மகிழ இக்காலம் அழைப்பு விடுக்கின்றது.

## III. தவக்காலம் :

விபூதிப் புதனோடு ஆரம்பிக்கும் தபக்காலம் குருத்தோலை ஞாயிறுக்கு முன்வரும் சனிக்கிழமை வரையுமான சுமார் 40 நாட்களைக் கொண்டுள்ளது. இக்காலத்தில் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு எனும் பாஸ்கா மறை நிகழ்வில் பங்குகொள்ள எம்மை விசேட விதமாக ஆயத்தம் செய்யும் காலம் இதுவாகும். செப, தப, தானஒறுத்தல் முயற்சிகள் வழியாக மனமாற்றம் பெற்று பாஸ்கா மறைநிகழ்ச்சியில் பங்குகொள்ள ஆயத்தம் பெறுகிறோம்.

குருத்தோலை ஞாயிறு தொடக்கம் திருவிழிப்பு வரையான வழிபாட்டு வாரத்தை பரிசுத்த வாரம் என்கிறோம். நம் வழிபாட்டு வாழ்வின் அதி உன்னத வழிபாடுகளை கொண்டது இவ் வாரமாகும். இவ்வழிபாடுகளில் பாஸ்கா மறைநிகழ்ச்சிகளை இன்னும் ஆழமாகத் தியானிக்கின்றோம்.

## IV. பாஸ்கா காலம் :

உயிர்ப்பு விழா தொடக்கம் பெந்தகோஸ்து வரையான காலம் பாஸ்கா காலமாகும். உயிர்ப்பு மகிழ்ச்சியின் காலமாகவும், மீட்பை வாழ்ந்து அறிவிக்கும் காலமாகவும் இக்காலம் முக்கியம் பெறுகிறது.

## V. பொதுக் காலம் :

34 வாரங்களைக் கொண்ட பொதுக்காலம் திருவழிபாட்டு ஆண்டில் இரு முறை வரும். அவையாவன:

01. இயேசுவின் திருமுழுக்குக்கும் விபூதிப் புதனுக்கும் இடைப்பட்ட காலம்
02. பெந்தகோஸ்தே விழா தொடக்கம் கிறிஸ்து அரசர் பெருவிழா வரையுள்ள காலம்

இப்பொதுக் காலத்தில் சிறப்பாகக் கன்னிமரியாளினதும், புனிதர்களினதும், விழாவைக் கொண்டாடி இறைவனோடு ஒன்றிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

## செயற்பாடு

**I. மிகப் பொருத்தமானவற்றின் கீழ்க் கோடிடவும்:**

1. திருவழிபாட்டு ஆண்டு எத்தனை காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
   1. இரண்டு  2. மூன்று  3. ஐந்து  4. நான்கு

2. திருவழிபாட்டு ஆண்டு அமைக்கப்பட்ட முறை
   1. பக்தி முயற்சிகளின் அடிப்படையில்
   2. புனிதர்களின் திருவிழாக்களின் அடிப்படையில்
   3. மரியன்னையின் வாழ்க்கையின் அடிப்படையில்
   4. இயேசுவின் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளின் அடிப்படையில்

3. திருவழிபாட்டில் செயலாற்றுபவர்
   1. குருக்கள், துறவிகள்  2. கிறிஸ்துவும், இறை மக்களும்
   3. குருவும் இறைமக்களும்  4. தூய ஆவியும் இறைமக்களும்

4. திருவழிபாட்டின் முக்கிய உட்கூறுகள்
   1. இரண்டு  2. நான்கு  3. ஐந்து  4. மூன்று

## II. இடைவெளி நிரப்புங்கள் :

1. திருவழிபாட்டு ஆண்டு .................................... காலத்தோடு ஆரம்பமாகின்றது. இக்காலத்தில் கிறிஸ்துவின் ................................ ஆயத்தம் செய்து நினைவு கூருகிறோம். இக்காலத்தில் பாவிக்கப்படும் நிறம் .................................

2. கிறிஸ்து பிறப்புப் பெருவிழா முதல் அவரது திருமுழுக்கு பெரு விழாவரையுள்ள காலத்தை ................................ என அழைக்கிறோம். இக்காலத்தில் பாவிக்கப்படும். நிறம் ....................................

3. திருநீற்றுப்புதன் முதல் குருத்தோலை ஞாயிறு வரையுள்ள நாற்பது நாட்கள் ............................................. காலமாகும். இந்நாட்களில் தபம் செய்து ............................... இறைவனை நாட வேண்டுமென ஊக்குவிக்கப்படுகின்றோம். இக்காலத்தில் பாவிக்கப்படும் நிறம் ..................................................

4. பாஸ்காப் பெருவிழா முதல் தூய ஆவியின் பெருவிழா வரையுள்ள காலத்தை .................................. காலம் என அழைக்கிறோம். இக்காலத்தில் பாவிக்கப்படும் நிறம் ................................................

5. பொதுக்காலம் ..................... வாரங்களைக் கொண்டுள்ளது. இக்காலத்தில் பயன்படுத்தப்படுதம் நிறம் .........................................

### வாழ்க்கைக்கு

திருவழிபாட்டுக் காலங்களுக்கேற்ப வழிபாடுகளில் திருச்சபையுடன் இணைவோம். இறைவனை ஆராதித்து மகிமைப்படுத்துவோம். இறையருளைப் பெறுவோம். அர்த்தமுள்ள கிறிஸ்தவ வாழ்வை வாழ்வோம்.